සියලු ම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved]

සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
Sabaragamuwa Provincial Department of Education

வாராந்த பாடசாலை - 2021 தரம் - 08
සති පාසල - 2021 08 ශ්‍රේණිය
Weekly school - 2021 Grade - 08

புவியியல்
භූගෝල විද්‍යාව
Geography

வாரம் - 06

தயாரிப்பு:
ஆசிரியர்: M.தினேஸ் BA,PGDE®
இ/ எம்பி/ மாதம்பை இல:02 தமிழ்
வித்தியாலயம், இறக்குவானை.
எம்பிலிபிடிய கல்வி வலயம்

**அலகு : 02. உயிரினங்களின் வாழிடமாக புவியின் தனித்துவம்**

- **மாணவர்கள் புத்தகத்தின் 23 ஆம் பக்கம் தொடக்கம் 24 ஆம் பக்கம் வரை பார்க்கவும்.**
- **நியம நேரத்தை கற்பதற்கான வழிகாட்டி செயலட்டை கணித செயன்முறைகளை கவனத்தில் கொள்க.**
- **பின்வரும் செயன்முறையை கடந்த 4 ஆம் வார செயலட்டையுடன் தொடர்ச்சியாக அவதானிக்க.**

இச்செயலட்டையில் இலங்கையின் நேரத்தினைக் கொண்டு ஏனைய நாடுகளின் நியம நேரங்களைக் கணித்தல்.

**உதாரணம் :**

கொழும்பு நேரம் = நண்பகல் 12.00 மணி
தென் அமெரிக்காவின் றியோடிஜெனிரோ அமைந்துள்ள இடம் = $40^0$ மேற்கு நெட்டாங்கு
கொழும்பிலிருந்து கிறீன்விச் நெட்டாங்கு = $80^0$
கிறீன்விச் கோட்டிலிருந்து றியோடி ஜெனிரோ அமைந்துள்ள இடத்தின் நெட்டாங்கு = $40^0$
கொழும்பிலிருந்து மேற்கு நெட்டாங்கு அளவு $40^0$ வரை உள்ள நெட்டாங்குகளின் தொகை = $80^0 + 40^0 = 120^0$
$1^0$ நெட்டாங்கை கடப்பதற்கான நேரம் = 4 நிமிடங்கள்
$120^0$ நெட்டாங்கை கடப்பதற்கான நேரம் = 120 x 4 = 480 நிமிடங்கள்
= 480 நிமிடங்கள் / 60 நிமிடங்கள்
= 8 மணித்தியாலயங்கள்

ஆகவே இலங்கையின் நேரம் 12.00 மணியில் இருந்து இலங்கையிலிருந்து $120^0$ வேறுபாட்டில் உள்ள நாட்டிற்கு இடையிலான நேர வேறுபாடு 8 மணித்தியாலத்தினை மேற்கு நெட்டாங்கு என்பதால் நேரம் குறைவாக காணப்படும். எனவே 8 மணித்தியாலத்தைக் கழித்தல் வேண்டும்.
= 12.00 – 8.00
∴ றியோடிஜெனிரோவின் நேரம் = அதிகாலை 4 மணி

மேற்கண்ட உதாரணத்தினைக் கொண்டு இலங்கையின் நேரம் மாலை 4.00 மணியாகும் போது பின்வரும் நெட்டாங்குகளில் உள்ள நாடுகளின் நேரங்களை கணித்துக் கூறுக.

மேற்கு நெட்டாங்கு – 1. $30^0$ 2. $40^0$ 3. $50^0$ 4. $60^0$ 5. $75^0$
6. $90^0$ 7. $100^0$ 8. $120^0$ 9. $135^0$ 10. $150^0$

கிழக்கு நெட்டாங்கு - 1. $75^0$ 2. $60^0$ 3. $40^0$ 5. $50^0$

கிழக்கு நெட்டாங்கு - 1. $85^0$ 2. $90^0$ 3. $100^0$ 5. $120^0$
( அவதானித்து செயற்படவும் இதன் செய்கை வழியில் வரும் நேரத்தை இலங்கை நேரத்துடன் கூட்டுதல் வேண்டும் )

**“ கஷ்டம் வரும் போது கண்ணை மூடாதே கண்ணை திறந்து பார், நீ அதை வென்று விடலாம் ”**

**என்றும் உங்கள் ஆசான் : M.தினேஷ்.**